بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

24 ஜமாதில் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 31 சுலஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி 31 ஜனவரி 2019


## அல்லாஹ்வின் கட்டளை

قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ ۫ وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ؕ بِيَدِكَ الْخَيْرُ ؕ

நீர் கூறுவீராக: ஆட்சிக்கதிபதியாகிய அல்லாஹ்வே! நீ விரும்புவோருக்கு ஆட்சியினை வழங்குகின்றாய். விரும்புபவரிடமிருந்து ஆட்சியினைப் பறிக்கின்றாய். விரும்புவோருக்கு மேன்மையை வழங்குகின்றாய். விரும்புபவரை இழிவுபடுத்துகின்றாய். எல்லா நன்மைகளும் உன் கையில்தான் இருக்கின்றன. (3:27)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**பாவமே இல்லையென்றால் பிறகு மனிதனிடம் ஆணவத்திற்கான விஷம் அதிகமாகி விடும். ஆனால் தவ்பா இதனைச் சரி செய்கின்றது. ஆணவத்தின், அகங்காரத்தின் பாவத்திலிருந்து மனிதனை அது பாதுகாத்து வைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 70 முறை இஸ்திக்ஃபார் செய்திருக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? இறைவன் மீது திருப்தியடையாத, பாவத்தைப் பாவமாக கருதாத அந்த நபரே பாவத்திலிருந்து தவ்பா செய்ய மாட்டார். இறுதியில் அந்த நபரை இறைவன் கைவிட்டு விடுவான்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

### பைஅத் மற்றும் தவ்பா

பைஅத்தின் நிபந்தனைகள் மற்றும் தேவை என்ன? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பொருளின் நன்மையையும் மதிப்பையும் நாம் தெரிந்து கொள்ளாத வரை அதன் முக்கியத்துவம் நமது கண்களுக்குத் தென்படாது. உதாரணமாக, பணம், விறகு, வீடு போன்றவை.

ஆக, பொருட்களின் தரத்தைப் பொருத்து அவை பாதுகாக்கப்படுகின்றன. ரூபாய், காசு ஆகியவற்றைப் பாதுகாப்பிற்காக செய்யும் ஏற்பாடுகளை ஒரு சாதாரண பொருளுக்காக செய்வதில்லை. விறகு போன்ற பொருட்களை மூலையில் போட்டு விடுவார். இந்த விஷயத்தின் அடிப்படையில் எந்தப் பொருளை இழந்தால் அதிக நஷ்டம் ஏற்படுகின்றதோ அந்தப் பொருளை அதிகமாகப் பாதுகாக்கின்றார்.

இதே போன்றுதான் பைஅத்தின் மகத்தான விஷயம் தவ்பா ஆகும். அதன் பொருள் திரும்புதல் ஆகும். தவ்பா என்பது மனிதன் எந்த பாவங்களில் அவன் அதிகமாக ஈடுபட்டிருந்தானோ மேலும் அதனையே அவன் தனது இருப்பிடமாக ஆக்கிக் கொண்டானோ இவ்வாறு அந்தத் தீமைகளிலேயே அவன் வளர்ந்து வருவதாக தன்னை நிர்ணயித்துக் கொண்டானோ அதனை விட்டு விடுவதே தவ்பா ஆகும்.

மேலும் திரும்புதல் என்பதன் பொருள் தூய்மையை மேற்கொள்வதாகும். தாம் இருந்த இடத்தை விட்டு விடுவதென்பது மிகவும் இயலாத ஒன்றாகும். அதனால் மன வருத்தம் ஏற்படுகின்றது.

ஒரு வீட்டை மனிதன் விட்டு விட்டால் அவனுக்கு எந்த அளவுக்கு துக்கம் ஏற்படுகின்றது. மேலும் நாட்டை விட்டு விட்டுச் செல்வது என்பது அவனது அனைத்து அன்பிற்குரியவர்களிடமிருந்தும் தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டியது வருகின்றது. மேலும் இவ்வாறு அவனுக்கு கட்டில், அண்டை அயலார்கள், தாம் வசித்த இடம், கடை வீதிகள் என அனைத்தையும் விட்டு விட்டு ஒரு புதிய நாட்டிற்கு செல்ல வேண்டியது வருகின்றது. அதாவது அவர் அந்த (முந்தைய) நாட்டிற்கு ஒருபோதும் வர மாட்டார். இதன் பெயரே தவ்பா ஆகும். தீமை செய்வதற்கான நண்பர்கள் வேறு விதமாகவும், இறையச்சத்தைப் பேணி நடக்கக்கூடிய நண்பர்கள் வேறு விதமாகவும் இருப்பார்கள். இந்த மாற்றத்தை சூஃபிகள் மரணம் என்று கூறுகின்றனர்.

எவர் தவ்பா செய்வாரோ அவருக்குக் கஷ்டத்தை மேற்கொள்ள வேண்டியது வருகின்றது. மேலும் உண்மையான தவ்பா செய்யும்போது அவருக்கு முன்னால் பெரிய பெரிய கஷ்டங்கள் வருகின்றன. மேலும் அல்லாஹ் கருணை காட்டக்கூடியவனாகவும், மன்னிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் இதற்கு மாற்றமாக ஒன்றை வழங்காமல் ஒருபோதும் இருப்பதில்லை.

அல்லாஹ் திருக்குர்ஆனில் اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ (2:223) என்று கூறுகின்றான். இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால், அந்த மனிதர் தவ்பா செய்து ஏழையாகவும், ஒன்று மற்றவராகவும் ஆகி விடுகின்றார். இதன் காரணமாக அல்லாஹ் அவர் மீது அன்பு கொள்கின்றான். மேலும் அவரை நன்மைகள் செய்யக் கூடியவர்களின் ஜமாஅத்தில் இணைக்கின்றான். மற்ற சமுதாயங்கள் இறைவனை கருணை காட்டக்கூடியவனாகவும், மன்னிக்கக் கூடியவனாகவும் கருதுவதில்லை.

கிறித்தவர்கள் இறைவனை அநீதி இழைக்கக் கூடியவன் என்று கருதுகின்றனர். ஆனால் மகனைக் கருணை காட்டக் கூடியவராக கருதுகின்றனர். அதாவது தந்தை பாவங்களை மன்னிக்கவில்லை. ஆனால் மகன் தமது உயிரையே அர்ப்பணித்துப் பாவங்களை மன்னித்தருளினார் என்று கருதுகின்றனர். தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இருக்கும் இத்தகைய வேறுபாடு மிகப் பெரிய முட்டாள்தனமாகும். தந்தைக்கும் மகனுக்கும் இருக்கின்ற கருத்துதொற்றுமையில் நல்லொழுக்கங்களும், பழக்க வழக்கங்களும் காணப்படுகின்றன. (ஆனால் இங்கு முற்றிலும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு முழுமையான கட்டுப்படுதல்தான் வெற்றிக்கு உத்திரவாதம் தரும்**

**கட்டுப்படுதல், கலப்பற்றதன்மை, நன்றியுணர்வு ஆகியவற்றை கொண்டிருந்த பத்ர் போர் சஹாபிகளான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அர்ரபீ (ரலி), ஹஸ்ரத் அதிய்யா பின் நுவைரா (ரலி), ஹஸ்ரத் சஹ்ல் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஹுமைர் அஷ்ஜஈ (ரலி), ஹஸ்ரத் உபைது பின் அவ்ஸ் அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) ஆகியவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நற்குறிப்பு**

**அல்லாஹ் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் மற்றும் அவர்களுடன் இருந்தவர்களைத் தம்மை அர்ப்பணித்தவாறு கட்டளையின் ஆன்மாவை புரிந்து பற்றுறுதிமிக்கவர்களாக ஆக்கி இருந்தான். அவ்வாறே நம்மையும் அல்லாஹ்வின் அருளால் கட்டளையினைப் புரிந்து கட்டுப்படக் கூடியவர்களாக ஆக்கி இறைவனது அருளுக்கு நிரந்தர வாரிசாவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக**

**கனடாவைச் சார்ந்த கலப்பற்ற அஹ்மதியான மதிப்பிற்குரிய நாதிருல் ஹுஸ்னி சாஹிபின் ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள். மேலும் அன்னாரது நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 28 டிசம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றிக் கூறுவேன். அவர்களுள் முதலாவதாக கூறப்போவது ***அப்துல்லாஹ் பின் அர்ரபீ*** அன்ஸாரி அவர்களுடையது. அப்துல்லாஹ் பின் அர்ரபீ அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ அப்ஜரைச் சார்ந்தவர். அவர்களின் தாயார் பெயர் பாத்திமா பின்த் அம்ரு ஆகும். இவர் முதல் மற்றும் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார். இவர் பத்ர், உஹது, மூத்தா ஆகிய போர்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். மூத்தா போரில் ஷஹாதத்தின் பதவியைப் பெறும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 407 அப்துல்லாஹ் பின் அர்ரபீஃ (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபி ***ஹஸ்ரத் ஆதிய்யா பின் நுவைரா***. இவர் பத்ர் போரில் கலந்து கொண்டார். இவரைப் பற்றி இவர் பத்ர் போரில் கலந்து கொண்டுள்ளார் என்ற அளவுக்கு மட்டுமே விவரங்கள் உள்ளன.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 45 அதிய்யா பின் நுவைரா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ***ஹஸ்ரத் சஹ்ல் பின் கைஸ்***. இவர்களது தாயார் நாயிலா பின்த் சலாமா ஆகும். இவர் புகழ்பெற்ற கவிஞரான கஅப் பின் மாலிக் அவர்களின் சிறிய தந்தையின் மகன் ஆவார்கள். ஸஹ்ல் அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 436 சஹ்ல் பின் கைஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வருடமும் உஹதில் ஷஹீதான சஹாபியின் மண்ணறைகளைத் தரிசிக்கச் செல்வார்கள். அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றதும் உரத்த குரலில் اَلسَّلَامُ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ فَنِعْمَ عُقْبَى الدَّار (13:25) என்ற அர்ரஅத் அதிகாரத்தின் வசனத்தை ஓதுவார்கள். அந்த வசனம் اَلسَّلَامُ عَلَيْكُمْ என்பதற்குப் பதில் سَلَامٌ عَلَيْكُمْ என்று ஆரம்பமாகும். உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். காரணம், நீங்கள் பொறுமை செய்தீர்கள். اَلسَّلَامُ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ فَنِعْمَ عُقْبَى الدَّار. அந்த வீட்டின் முடிவு எவ்வளவு சிறந்தது?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரும் கூட இந்த நடைமுறையைத் தொடர்ந்து செய்தார்கள். முஆவியா ஹஜ் உம்ராவுக்கு வரும்போது உஹது ஷஹீதுகளின் மண்ணறையைத் தரிசிக்கச் செல்வார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَيْتَ اَنِّيْ غُوْدِرْتُ مَعَ اَصْحَابِ الْجَبَلِ அந்தோ! இந்த மலையைச் சார்ந்தவர்களுடன் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எனக்கும் அந்நாளில் ஷஹாதத் கிடைத்திருக்குமே! என்று கூறி வந்தார்கள்.

அதுபோன்று சஅது பின் அபீ வகாஸ் காபா என்ற பெயர் கொண்ட மதீனாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள கிராமத்திற்கு தமது சொத்துக்களைப் பார்க்கச் செல்லும்போது உஹது ஷஹீதுகளின் கபர்களுக்கு ஸியாரத் செய்வார்கள். மூன்று முறை ஸலாம் கூறுவார்கள். பிறகு தம்முடன் இருப்பவர்களிடம் திரும்பி, இம்மக்களுக்கு ஸலாம் அனுப்ப மாட்டீர்களா? என்று கேட்பார்கள். அவர்கள் உங்கள் ஸலாமுக்கு பதில் தருகிறார்கள். அவர்களுக்கு ஸலாம் கூறியவருக்கு மறுமை நாளில் அவர்கள் பதில் தருவர் என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்அப் பின் உமைர் உடைய கபருக்கு அருகில் கடந்து சென்றபோது அங்கு நின்று துஆ செய்தார்கள். அன்னார் இந்த வசனத்தை ஓதினார்கள்.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ فَمِنْهُمْ

مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ - وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا

முஃமின்களில் சில ஆண் மக்கள் அல்லாஹ்விடம் வாக்குறுதி வழங்கி அதை உண்மையாக்கியும் காட்டினர். (33:24)

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ

அவர்களுள் சிலர் தமது நோக்கத்தை அடைந்து விட்டனர். அவர்களுள் சிலர் எதிர்பார்த்திருக்கின்றனர். அவர்கள் தமது செயலில் எந்த மாற்றமும் செய்யவில்லை.

பிறகு அன்னார் கூறினார்கள்: நான் சாட்சி கூறுகிறேன். மறுமை நாளில் அல்லாஹ்வின் பார்வையில் ஷஹீதுகளாக இருப்பவர் அவர்களிடம் வாருங்கள். அவர்களை தரிசனம் செய்யுங்கள். அவர்களுக்கு ஸலாம் அனுப்புங்கள். என் உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! மறுமை நாள் வரை எவர்கள் இவர்களுக்கு ஸலாம் அனுப்புவார்களோ அவர்கள் அனைவருக்கும் இவர்கள் பதில் தருவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களில் இங்கு வந்தவர்கள் இவர்களுக்காக துஆ செய்தார்கள். ஸலாமும் அனுப்பினார்கள்.

(கிதாபுல் மகாஸி. ஸிக்குர மின் கஸ்வத்தி உஹது, தொகுதி 1 பக்கம் 267 – 2004–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் சஹல் பின் கைஸ் உடைய சகோதரிகள் ஹஸ்ரத் சுக்தி, ஹஸ்ரத் உம்ரா இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஈமான் கொண்டார்கள். அவர்களிடம் பைஅத் செய்யும் வாய்ப்புப் பெற்றார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 301 சுக்தி பின் கைஸ், உம்ரா பின் கைஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ***ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுமய்யிர் அல் அஷ்ஜயீ.*** இவர்கள் பனூ துஹ்மான் கோத்திரத்தைச் சார்ந்தவர். இது அன்ஸார் சகோதரர்களின் நட்புக் கோத்திரம் ஆகும். இவர் பத்ர் போரில் தமது சகோதரர் காரிஜாவுடன் வந்து கலந்து கொண்டார். உஹது போரிலும் கலந்து கொண்டார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 218–219 அப்துல்லாஹ் பின் ஹுமைர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவருடைய மனைவி ஹஸ்ரத் உம்மு சாபித் பின்த் ஹாரிஸா ஆவார். இவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டிருந்தார்.

(அல் அஸாபா தொகுதி 8 பக்கம் 366 உம்மு சாபித் பின்த் ஹாரிஸா – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சில சஹாபிகள் மட்டும் மலையின் மீது காவலுக்கு நின்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுமைர் அவர்களுள் ஒருவர் ஆவார். மற்ற சஹாபாக்கள் வெற்றியின் காட்சியைக் கண்டதும் முஸ்லிம்களின் மற்ற அணியினருடன் இணைவதற்காக கீழே இறங்கி விட்டனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமய்யிர் அவர்களுக்கு அறிவுரை செய்வதற்காக நின்றார்கள். அன்னார் முதலில் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். பிறகு அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வின் தூதருக்குக் கட்டுப்பட வேண்டும் என்று போதனை செய்தார்கள். ஆனால் அவர்கள் அன்னாரின் பேச்சைக் கேட்கவில்லை; சென்று விட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களுடன் மலையின் முகட்டில் உள்ள பாதையில் 10 சஹாபாக்களை விட அதிகம் நிற்கவில்லை. இந்நிலையில் காலித் பின் வலீத், இக்ரிமா பின் அபீஜஹ்ல் ஆகியோர் முகட்டுப்பாதை காலியாக இருப்பதைப் பார்த்து விட்டார்கள். மற்ற சஹாபாக்கள் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார்கள். எனவே வந்து தாக்குதல் தொடுத்தனர். அம்புகளை விட்டனர். அவை அவர்களை வந்தடைந்தது. அவ்விடத்திலேயே அவர்களை ஷஹீதாக்கினர்.

(அம்தாவுல் அஸ்மாஃ தொகுதி 9 பக்கம் 229 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதனை குறித்து உஹது சம்பவம் பற்றி மேலும் விவரமாக மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத்துல் காத்தமுன் நபிய்யீன் என்ற தமது நூலில் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறை உதவியை நம்பியவாறு முன்னேறி உஹது மலையடிவாரத்தில் முகாமிட்டார்கள். உஹது மலை முஸ்லிம்களுக்குப் பின்னால் இருக்கும் வகையில் முகாமிட்டார்கள். மதீனா அவர்களுக்கு முன்னால் இருந்தது.

இவ்வாறு அன்னார் படைகளை முற்றுகையிட்டார்கள். அம்மலையின் முகட்டில் ஒரு பகுதி இருந்தது. எதிரிகள் அதன் வழியாக வந்து விடலாம். எனவே அதனைப் பாதுகாக்க அன்னார் அப்துல்லாஹ் பின் சுபைர் தலைமையில் 50 அம்பு வீசும் வீரர்களை நியமித்து, என்ன நடந்தாலும் அவ்விடத்தை விட்டு அகலக் கூடாது என்று வலியுறுத்தி இருந்தார்கள். எதிரிகள் மீது நீங்கள் அம்புகளை விட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

அன்னாருக்கு இம்முகட்டுப் பாதையைப் பாதுகாப்பதில் எவ்வளவு கவனம் இருந்தது என்றால் அவர்கள் அப்துல்லாஹ் பின் சுபைரிடம் மீண்டும் மீண்டும் கூறி இருந்தார்கள். இந்த மலைப் பாதையை ஒருபோதும் காலியாக விட்டு விடாதீர்கள். நமக்கு வெற்றி கிடைப்பதைப் பார்த்தாலும் எதிரிகள்விட்டு விட்டு ஓடினாலும் கூட நீங்கள் இவ்விடத்தை விட்டு அகலக் கூடாது.

நீங்கள் முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்படக் கண்டாலும் எதிரிகள் நம் மீது வெற்றி பெற்று விட்டாலும் சரி நீங்கள் இவ்விடத்தை விட்டு அகலக் கூடாது. எந்த அளவுக்கு என்றால் சில அறிவிப்புகளில் எந்த அளவுக்கு வார்த்தைகள் வருகின்றன என்றால் பறவைகள் எங்கள் மாமிசங்களைக் கொத்தித் தின்பதைப் பார்த்தாலும் இவ்விடத்தை விட்டு அகலக் கூடாது என்று கூறினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இங்கிருந்து வருமாறு உங்களுக்கு கட்டளை வரும் வரை நகரவே கூடாது. இவ்வாறு முற்றுமையை நன்றாக சரி செய்து இஸ்லாமிய படையை வியூகமிட்டார்கள். வேறு பகுதிகளுக்கு தனித்தனி அமீர்களை நியமித்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைருடன் இருந்தவர்கள் வெற்றி கிடைத்ததைப் பார்த்தார்கள். அவர்கள் தமது அமீர் அப்துல்லாஹ்விடம் கூறினார்கள். வெற்றி கிடைத்து விட்டது. முஸ்லிம்கள் போர்ப் பொருட்களைச் சேகரிக்கின்றார்கள். எங்களுக்கும் அனுமதி தாருங்கள். நாங்கள் நமது படையினருடன் சென்று சேர்ந்து கொள்கிறோம். ஹஸ்ரத் அப்துல்லாஹ் தடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வலியுறுத்திக் கூறப்பட்ட கட்டளையை நினைவுபடுத்தினார்கள். ஆனால் அவர்கள் வெற்றியின் மகிழ்ச்சியில் கவனமற்றவர்களாகி விட்டனர்.

எனவே அவர்கள் திரும்பி வரவில்லை. கீழே இறங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள் நன்றாக திருப்தி அடையாதவரை இடத்தை காலியாக்கி விடக் கூடாது என்பதுதான். இப்போதோ வெற்றி கிடைத்து விட்டது. எனவே இப்போது செல்வதில் எந்த தவறும் இல்லை என்றனர். அப்துல்லாஹ் பின் சுபைர் மற்றும் அவருடன் இருந்த 5–7 சஹாபிகள் தவிர முகட்டிற்குச் செல்லும் மலைப் பாதையை பாதுகாக்க வேறு எவரும் இல்லை. காலித் பின் வலீத் உடைய கூரிய பார்வை தூரத்தில் இருந்தே முகடு செல்லும் பாதை காலியாக இருப்பதைக் கண்டது. களம் காலியாக இருப்பதாக அறிந்தார்கள்.

தமது வாகனங்களை சீக்கிரமாக ஒன்று கூட்டி முகட்டை நோக்கிச் செல்லும் பாதைக்கு திரும்பினார்கள். பின்னாலேயே இக்ரிமா பின் அபூ ஜஹ்ல் சென்றார். இவர்கள் வேகமாக

அவ்விடத்தை அடைந்தார்கள். இரு கூட்டமும் சேர்ந்து அப்துல்லாஹ் பின் சுபைர் மற்றும் அவர்கள் கூட இருந்த சில சஹாபிகளை அங்கேயே கொன்று போட்டு விட்டு இஸ்லாமிய இராணுவத்தை திடீரென்று அங்கிருந்து தாக்கினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 487,488 & 491)

அடுத்த குறிப்பு **உபைது பின் அவ்ஸ்** அன்ஸாரி பற்றியது. இவரது தந்தை அவ்ஸ் பின் மாலிக். உபைத் பின் அவ்ஸ் பத்ர் போரில் பங்கு கொண்டார்கள். இவர்கள் பத்ர் போரில் அகீல் பின் அபூதாலிபை கைது செய்தார். மேலும் இவரைப் பற்றி கூறப்படுகிறது. அப்பாஸ் மற்றும் நவ்ஃபல் இருவரையும் கூட கைது செய்தனர். இவர்கள் மூன்று பேரையும் ஒரு கயிற்றில் கட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்து, لَقَدْ اَعَانَكَ عَلَيْهِمْ مَلَكٌ كَرِيْمٌ – நிச்சயமாக இந்த விவகாரத்தில் கண்ணியத்திற்குரிய மலக்கு உமக்கு உதவி செய்துள்ளார் என்று கூறினார்கள். இதற்காகவே இவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகர்ரின் அதாவது சங்கிலியால் பிணைப்பவர் என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 528,529 உபைது பின் அவ்ஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களை பத்ரில் கைது செய்தவர் ஹஸ்ரத் அபுல் யஸர் கஅப் பின் அம்ர் ஆவார் என்று இன்னோர் அறிவிப்பு வருகிறது.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 326,327 அபுல் யஸர் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உபைது பின் அவ்ஸ் அவர்கள் உமைமா பின்த் அந்நுஃமான் என்பவரை திருமணம் செய்தார்கள். உமைமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார். பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்றார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 257 உமைமா பின்த் அந்நுஃமான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த குறிப்பு **அப்துல்லாஹ் பின் சுபைர்**. இன்னொரு சஹாபி பற்றி கூறும்போது இவர்களைப் பற்றி சிறிது கூறப்பட்டது. அவரும் கூட ஒரு குழுவின் உதவித் தலைவர் ஆக அப்துல்லாஹ் பின் சுபைரின் கீழ் பணியாற்றியவர்தான். அன்னார் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்ட 70 பேர்களில் ஒருவர் ஆவார். இவர் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டவர் ஆவார். உஹது போரில் ஷஹாதத் கிடைத்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 362 அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபுல் ஆஸ் என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகள் ஸைனப் உடைய கணவர் ஆவார். பத்ரில் எதிரிகள் தரப்பிலிருந்து வந்திருந்தார். அப்துல்லாஹ் பின் சுபைர் இவரை கைது செய்தார்கள்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் மஃரூஃபத்துஸ் சஹாபா ஸிக்ர் மனாகிப் அபுல் ஆஸ் பின் ரபீஃ ஹதீஸ் எண் 5037 தொகுதி 3 பக்கம் 262 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இதன் விவரத்தை விளக்கியவாறு சீரத்துல் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மருமகன் அபுல் ஆஸ் அவர்களும் பத்ரின் கைதிகளில் ஒருவராக இருந்தார். அவரது பரிகாரத் தொகையில் அன்னாரது மனைவியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகளுமான மக்காவில் அதுவரை வாழ்ந்து வந்த ஸைனபிடம் சில பொருட்கள் இருந்தன. அவற்றில் ஒரு கழுத்தணி மாலை இருந்தது. அது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தமது மகள் ஸைனபுக்கு சீதனமாக போட்டு அனுப்பியதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மாலையைப் பார்த்தார்கள். உடனே அன்னாருக்கு மர்ஹூமா கதீஜாவின் நினைவு உள்ளத்தில் ஏற்பட்டது. அன்னாரின் கண்கள் கண்ணீரை சிந்தின. சஹாபாக்களிடம் அன்னார், நீங்கள் விரும்பினால் இவர்களது இந்த பொருளை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று கூறினார்கள். சஹாபாக்களுக்கு சைக்கினை செய்ததுதான் தாமதம்.

ஸைனபின் மாலை உடனேயே திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிணைக் கைதிக்குப் பகரமாக அபுல் ஆஸ் இடம் ஒரு நிபந்தனையை மட்டும் வைத்தார்கள். அவர் மக்கா சென்று ஸைனபை உடனே மதீனாவுக்கு அனுப்ப வேண்டும் என்பதே அது. இவ்வாறு ஒரு நம்பிக்கை கொண்ட ஆன்மா குஃப்ரின் வீட்டிலிருந்து விடுதலை பெற்றது. சில காலம் கழித்து அபுல் ஆஸ் முஸ்லிம் ஆகி இடம் பெயர்ந்து மதீனா வந்து விட்டார். இவ்வாறு கணவனும் மனைவியும் ஒன்று சேர்ந்தனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 368)

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜுபைர் அவர்களை 50 அம்பு எய்தும் வீரர்களுக்கு அவர்களை தலைவராக்கி, முஸ்லிம்கள் சார்பாக ஒரு மலைப் பாதையைப் பாதுகாக்க அனுப்பினார்கள். மற்ற விபரங்களை அப்துல்லாஹ் பின் ஹுமைய்யிர் பற்றி கூறும்போது கூறி விட்டேன். மேலும் அதிகமாக உள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனது உதவியின் மீது நம்பிக்கை வைத்து முன்னேறினார்கள். அந்த இடத்தில் முகாமிட்டு தங்கினார்கள். அந்த இடத்தில் முஸ்லிம்களின் பின்னால் உஹது மலை இருந்தது. மதீனா முன் பக்கம் இருந்தது. இவ்வாறு அன்னார் தமது படையை நிறுத்தி இருந்தார்கள். அன்னார் அப்துல்லாஹ் பின் சுபைரின் தலைமையில் 50 அம்பு எய்தும் வீரர்களை ஒரு மலைப் பாதையில் நிறுத்தி, எது நடந்தாலும் அந்த இடத்தை விட்டு அகலக் கூடாது எதிரிகள் மீது அம்புகளை விட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 487)

ஏற்கெனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்த முகட்டுப் பாதையைப் பாதுகாப்பதில் எவ்வளவு கவனம் இருந்தது என்றால் அன்னார் அப்துல்லாஹ் பின் சுபைரிடம் மீண்டும் மீண்டும் கூறினார்கள். பாருங்கள்! இந்த முகடு ஒருபோதும் காலியாக இருக்கக் கூடாது. வெற்றி கிடைத்து எதிரிகள் ஓடி விட்டாலும் சரி நீங்கள் இந்த இடத்தை விட்டு செல்லக் கூடாது. முஸ்லிம்கள் தோற்று விட்டாலும் சரி, எதிரிகள் நம் மீது மிகைத்து விட்டாலும் சரி, இந்த இடத்தை விட்டு செல்லக் கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது நாளில் ஒரு படைக்கு அப்துல்லாஹ் பின் சுபைரை தலைவராக்கினார்கள். அது 50 பேரைக் கொண்ட குழுவாகும். பறவைகள் உங்களை கொத்தித் தின்றாலும் நீங்கள் இந்த இடத்தை விட்டு அகலக் கூடாது. நான் உங்களை அழைக்கும் வரை அந்த இடத்தை விட்டு நகரக் கூடாது. மக்கள் எங்களை தோற்கடிக்கக் கண்டாலும் நீங்கள் அங்கிருந்து அகலக் கூடாது. நாங்கள் உங்களை கூப்பிட்டு அனுப்பாமல் நகரக் கூடாது.

இந்த நிலையில் முஸ்லிம்கள் எதிர்களைத் தோற்கடித்தவுடன் பராஹ் கூறுகிறார்: இறைவன் மீது ஆணையாக! நான் இணை வைக்கும் பெண்களைப் பார்த்தேன். அவர்கள் தங்கள் ஆடைகளை தூக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர். (அப்போது பட்டாளத்துடன் பெண்களும் கூட வருவார்கள். மக்களது உணர்வுகளை தூண்டி விடுவதற்காக அழைத்து வருவார்கள்.) அவர்களின் கொலுசகளும் கரண்டைகளும் அம்பலமாகிக் கொண்டிருந்தன. அப்துல்லாஹ் பின் சுபைருடன் இருந்தவர்கள் இதை பார்த்துக் கூறினர். மக்களே! சென்று போர்ச் செல்வங்களை அள்ளுங்கள். உங்கள் நண்பர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். வேறு எதனை எதிர்பார்க்கிறீர்கள்? அவர்களைப் பார்த்து அப்துல்லாஹ் பின் சுபைர் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் கூறியதை மறந்து விட்டீர்களா? இந்த இடத்தை விட்டு செல்ல விரும்பிய மக்கள், இறைவன் மீது ஆணையாக! நாங்களும் போர்ச் செல்வங்களை திரட்டுபவர்களுடன் செல்வோம் என்று கூறினர். முஸ்லிம்கள் அங்கு சென்றதும் எதிரிகளான அவர்களின் முகம் திரும்பி விட்டது. தோற்று ஓடிய எதிரிகள் திரும்பி வந்தனர்.

இந்த சம்பவம் குறித்தே அல்லாஹ் கூறுகிறான்: உங்களது தூதர் உங்களுக்கு பின்னல் நின்று உங்களை அழைத்துக் கொண்டிருந்தார். (3:154) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் 12 பேர் தவிர வேறு எவரும் இல்லை. மறுப்போர் எங்களில் 70 பேரை ஷஹீதாக்கினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் சஹாபாக்களும் எதிரிகளில் 140 பேருக்கு காயம் ஏற்படுத்தினர். 70 பேர் கைது செய்யப்பட்டனர். 70 பேர் கொலை செய்யப்பட்டனர். அபூஸுஃப்யான் போர்க்களத்தில் மூன்று முறை சப்தமிட்டார். உஹது போர் சம்பவம் கூறப்படுகிறது.

உங்களில் முஹம்மது இருக்கிறாரா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் சொல்வதிலிருந்து சஹாபிகளைத் தடுத்து விட்டார்கள். எதிரிகளின் தோல்வி நிலை மாறி திரும்பவும் தாக்குதல் தொடுத்து விட்டார்கள். இந்நிலையில் அபூஸுஃப்யான், உங்களில் முஹம்மது இருக்கிறாரா? என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் சொல்ல வேண்டாம் என்று தடுத்து விட்டார்கள். பிறகு அவர் மக்களிடம், அபு குஹாஃபாவின் மகன் இருக்கிறாரா? என்று மூன்று முறை சப்தமிட்டார். அதாவது அபூபக்ர் (ரலி) அவர்கள் பற்றி கேட்டார். பிறகு மக்களிடம் இப்னு கத்தாப் இருக்கிறாரா? என்று மூன்று முறை கேட்டார்.

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பற்றி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் ஒவ்வொரு முறை கேட்கும்போதும் பதில் கூற வேண்டாம் என்றே கூறி வந்தார்கள். பிறகு அவர் தம்முடன் இருப்பவர்களிடம் திரும்பி, இந்த மூன்று பேரும் மரணித்து விட்டனர் என்று கூறினார்கள். இந்த மூன்று பேரும் இறந்திருக்கலாம் என்று நினைத்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் அமைதியாக இருக்க முடியவில்லை. ஹஸ்ரத் உமர், அல்லாஹ்வின் எதிரியே! நீ பொய் சொல்கிறாய்? நாங்கள் மூவருமே உயிருடன் இருக்கிறோம். உனக்கு இப்போது வந்தது ஒன்றும் இல்லை. இன்னும் நிறைய உனக்கு கிடைக்கவிருக்கிறது என்றார்கள்.

அபூஸுஃப்யான் கூறினார்: இது பத்ரில் நடந்ததற்கு பதிலாகும். சண்டை என்பது எப்படியும் மாறும். சிலவேளை உங்களுக்கு வெற்றி என்றால் சில வேளை எங்களுக்கு வெற்றி ஏற்படும். நீங்களும் உங்களது மரணித்தவர்களின் மூக்குகள் அறுக்கப்பட்டவர்களாக காண்பீர்கள். மேலும் அவர் கூறினார்: நான் அதற்கு கட்டளையிடவில்லை. ஆனால் அதனைத் தவறாகவும் கருதவில்லை. பிறகு அவர் துயரத்துடன் ஒரு வார்த்தையைக் கூறினார்.

أُعْلُ هُبَل۔ أُعْلُ هُبَل – ஹுபுலுக்கு வெற்றி. ஹுபுலுக்கு வெற்றி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்கு பதில் கூறமாட்டீர்களா? என்று கேட்டார்கள். சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! என்ன பதில் கூற வேண்டும்? என்று கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், اَللّٰهُ اَعْلٰى وَاَجَلُّ அல்லாஹ் தான் உயர்ந்தவன்; மகிமை பொருந்தியவன் என்று கூறுங்கள் என்றார்கள்.

பிறகு அபூஸுஃப்யான் கூறினார்: உஸ்ஸா என்ற பெயருள்ள சிலை எங்களுக்கு உள்ளது. உங்களுக்கு எதுவும் இல்லை. இதனைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இதற்கு பதில் கூறமாட்டீர்களா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் கூறுகிறார்: சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! என்ன கூற வேண்டும்? என்று கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், اَللّٰهُ مَوْلَانَا وَلَا مَوْلٰى لَكُمْ – அல்லாஹ் எங்களுக்கு உதவியாளனாக உள்ளான். உங்களுக்கு அந்த உதவியாளன் இல்லை என்று கூறுங்கள் என்றார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது வஸ்ஸய்ர், ஹதீஸ் எண் 3039)

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவம் பற்றி உஹது போர் குறித்து போதுமான விபரம் தந்துள்ளார்கள்; ஒளியூட்டியுள்ளார்கள்.

சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி நின்றார்கள். எதிரிகளின் தாக்குதலால் பின்னால் தள்ளப்பட்டிருந்தனர். பிறகு நிராகரிப்பவர்களை விட்டு அகன்று மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தூக்கினார்கள். சூழ்ந்து நின்று கொண்டவர்களிடம் தமது முகத்தைக் காட்டினார்கள். உபைதா பின் அல்ஜர்ராஹ் என்ற ஒரு சஹாபி தமது பற்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகத்தில் பதிந்திருந்த அம்பை வெளியே எடுத்தார்கள். இதனால் அன்னாரது இரு பற்கள் உடைந்து விட்டன. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நினைவு திரும்பியது. நாலாபுறமும் எதிரிகளால் விரட்டப்பட்ட சஹாபாக்கள் மீண்டும் ஒன்று கூடினர். விரண்டோடிய படை மீண்டும் ஒன்று கூடியது.

அவர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மலை அடிவரத்திற்கு வந்தார்கள். மக்கள் கூடி நிற்பதைப் பார்த்து அபூஸுஃப்யான் கூச்சலிட்டார். நாங்கள் முஹம்மதை கொன்று விட்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யானுக்கு ஒரு பதிலும் கொடுக்கவில்லை. எதிரிகள் சூழ்நிலையிலிருந்து பயன் பெற்று மீண்டும் தாக்கத் தொடங்கி விடக்கூடாது என்று கருதி அன்னார் அவ்வாறு இருந்தார்கள். ஏனெனில் முஸ்லிம்கள் பலவீனமாக இருந்தனர். இதனால் காயமுற்ற முஸ்லிம்கள் மீண்டும் எதிரிகளால் வேட்டையாடப்பட்டு விடக் கூடாது என்று நினைத்தார்கள்.

இஸ்லாமிய படையிலிருந்து எந்த பதிலும் வரவில்லை என்றதும் அபூஸுஃப்யானுக்கு திட நம்பிக்கை வந்தது. நான் நினைத்தது சரிதான் போலும் என்று நினைத்து உரத்த குரலில், அபூபக்ரையும் கொன்றோம் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ருக்கு எந்த பதிலும் கொடுக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார்கள். பிறகு அபூஸுஃப்யான் குரல் கொடுத்தார்.

உமரையும் கொன்று விட்டோம். உமர் மிகவும் வேகமுள்ளவர். நாங்கள் இறை அருளால் உயிருடன் இருக்கிறோம். உங்களை எதிர் கொள்ளத் தயாராக உள்ளோம் என்று பதில் கூற விரும்பினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். முஸ்லிம்களுக்கு கஷ்டம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருங்கள் என்றார்கள். இப்போது நிராகரிப்பவர்களுக்கு திட உறுதி ஏற்பட்டது. இஸ்லாத்தின் நிறுவனரையும் அவர்களின் இரு புறத்திலும் இருந்தவர்களையும் கொன்று விட்டோம் என்று நினைத்து அபூஸுஃப்யான் أُعْلُ هُبَل-أُعْلُ هُبَل என்று மகிழ்ச்சியுடன் முழக்கமிட்டார். எங்கள் மதிப்பிற்குரிய ஹுபுல் சிலையின் மகத்துவம் உயர்க! இன்று இது இஸ்லாத்தை முடிவுக்கு கொண்டு வந்து விட்டது என்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தமது மரணம் பற்றி அறிவிக்கப்பட்டபோது, அபூபக்ரின் மரணம் பற்றி அறிவிக்கப்பட்டபோது, உமர் உடைய மரணம் பற்றி அறிவிக்கப்பட்டபோது அமைதியாக இருந்த அதே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்; எதிரிகள் மீண்டும் திரும்பி வந்து காயமுற்ற முஸ்லிம்களை தாக்கி விடக் கூடாதே என்று அமைதியாக இருந்த ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இப்போது ஒரே இறைவனைப் பற்றி கேள்வி எழும்போது, களத்தில் இணைவைப்பின் முழக்கம் இடப்படும்போது அன்னாரின் ஆன்மா பொங்கி எழுந்தது.

அன்னார் மிகவும் ஆவேசத்துடன் பதில் கூறினார்கள். நீங்கள் ஏன் பதில் கூறவில்லை? சஹாபாக்கள், யாரஸூலல்லாஹ்! என்ன பதில் கூற வேண்டும்? என்று கேட்டபோது اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ-اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ ஹுபுலின் மகத்துவம் வளர்ந்ததாக நீங்கள் பொய் கூறுகின்றீர்கள். அல்லாஹு வஹ்தஹு லாஷரீக் என்ற தனித்த இணையற்ற அல்லாஹ்வே கண்ணியத்திற்குரியவன். அவனது மகத்துவமே உயர்ந்தது என்று கூறி நாங்கள் அனைவரும் உயிருடன் இருக்கிற செய்தியை எதிரிகளுக்கு எட்டச் செய்தார்கள்.

இந்த துணிச்சல் மிக்க வீரமிக்க செயலின் தாக்கம் எதிரிகளின் படைகளில் எவ்வளவு ஆழமாக ஏற்பட்டது எனில் அவர்களின் நம்பிக்கை மண்ணோடு மண்ணாகி இருந்தும் கூட காயமுற்ற முஸ்லிம்கள்தான் அவர்களுக்கு முன் நிற்கிறார்கள். அவர்களை கொல்வது பௌதீக சட்டத்தின்படி முற்றிலும் அவர்களுக்கு சாத்தியமானதாக இருந்தும் தொடர்ந்து தாக்க துணிச்சல் வரவில்லை. மீண்டும் முழக்கமிட்டு ஆவேசமூட்டி கிடைத்த வெற்றியைக் கொண்டாடியவாறு திரும்பிச் சென்றனர்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி **20 பக்கம் 252–253)**

முஸ்லிஹ் மவ்வூது கீழ்க்கண்ட வசனத்தின் விளக்கத்தில் கூறினார்கள்:

فَلْيَحْذَرِ الَّذِينَ يُخَالِفُونَ عَنْ أَمْرِهِ أَنْ تُصِيبَهُمْ فِتْنَةٌ أَوْ يُصِيبَهُمْ عَذَابٌ أَلِيمٌ

எவர்கள் இந்த தூதருக்கு எதிராக நிற்கிறார்களோ அவர்கள் தமக்கு இறைவனிடமிருந்து ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டும் அல்லது ஏதாவது தண்டனையால் பீடிக்கப்பட்டு விடலாம். **(24:64)**

எனவே இந்த வகையில் உஹது போரில் கட்டளைக்கு எதிராக நடந்ததின் காரணமாக முஸ்லிம்களின் படைக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மலைப் பாதையைப் பாதுகாப்பதற்கு **50** வீரர்களை நியமித்தார்கள். அந்த முகடு எவ்வளவு முக்கியமானது என்றால் அப்துல்லாஹ் பின் சுபைர் தலைமையில் ஒரு படையை நிறுவி நாங்கள் தோற்றாலும் சரி வெற்றி பெற்றாலும் சரி இந்த முகட்டை விட்டு நரகக் கூடாது என்று கூறினார்கள். ஆனால் நிராகரிப்பவர்களுக்கு தோல்வி ஏற்பட்டவுடன் முஸ்லிம்கள் தமது முற்றுகையை ஆரம்பித்தார்கள்.

முகட்டினை நோக்கி செல்லும் பாதையில் நிறுத்தப்பட்ட வீரர்கள், வெற்றி கிடைத்து விட்டது. இனி நாம் இங்கே இருப்பது அர்த்தமற்றது. நாங்களும் சென்று போரிட அனுமதி தாருங்கள். நாங்களும் நற்பலன் பெறுகிறாம் என்றனர். அவர்களின் தலைவர் அவர்களுக்கு புரிய வைத்தார். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு மாற்றம் செய்யாதீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் வெற்றி பெற்றாலும் சரி தோற்றாலும் சரி, நீங்கள் இந்த மலைப் பாதையை விடக் கூடாது என்றுதான் கூறினார்கள். எனவே நீங்கள் செல்வதற்கு நான் அனுமதி வழங்க மாட்டேன் என்று கூறினார். அவர்களுடன் இருந்த மற்றவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள் வெற்றி கிடைத்தாலும் நகரக் கூடாது என்பதல்ல. அன்னார் கூறியது ஒரு கவனமூட்டல்தான்.

இப்போது வெற்றி கிடைத்து விட்டது. இனி நமக்கு இங்கு என்ன வேலை? என்று கூறியவாறு அவர்கள் தமது கருத்திற்கு இறை தூதரின் கட்டளையை விட முன்னுரிமை தந்தவாறு அந்த முகட்டை விட்டு விட்டனர். அவர்களது அதிகாரியும் சில வீரர்கள் மட்டும்தான் அங்கு தங்கினார்கள். மறுப்பவர்களின் படை மக்காவை நோக்கி ஓடியது. அப்போது காலித் பின் வலீது திரும்பிப் பார்த்தார். மலைப் பாதை காலியாக இருந்தது. அவர், அம்ர் பின் ஆஸை அழைத்தார். அவரும் அதுவரை இஸ்லாத்தை ஏற்கவில்லை.

பாருங்கள்! இது எத்தகைய சந்தர்ப்பம்! வாருங்கள்! நாம் முகட்டின் மீது ஏறி முஸ்லிம்களை தாக்குவோம் என்றார். இவ்வாறு இரு படைத் தளபதிகளும் ஓடி தமது படைகளைத் திரட்டினர். இஸ்லாமிய படையை ஓரத்தில் துண்டித்தவாறு மலைப் பாதையில் ஏறினர். அங்கு சில முஸ்லிம்கள் மட்டும் நின்றனர். அவர்களால் எதிரிகளைத் தாக்க முடியாது. அவர்களை துண்டு துண்டாக்கினார்கள். அங்கிருந்த முஸ்லிம்களை மீண்டும் தாக்கினர். மறுப்பவர்களின் இந்த தாக்குதல் எவ்வாறு திடீரென்று நடந்தது எனில் முஸ்லிம்கள் வெற்றியின் மகிழ்ச்சியில் ஆங்காங்கே விலகி விட்டனர். அவர்களின் பாதம் ஒன்று சேர முடியவில்லை. பிறகு சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சூழ்ந்து கொண்டனர். அவர்களின் எண்ணிக்கை அதிகமாக **20** பேர் இருந்தனர்.

அந்த சிறிய கூட்டம் எவ்வாறு எதிரிகளை எதிர்த்து நிற்க முடியும்? இறுதியில் நிராகரிப்பவர்களின் தாக்குதலால் முஸ்லிம்கள் பின்வாங்கினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்க்களத்தில் தனியாக நின்றார்கள். இந்நிலையில் அன்னாரின் மீது ஒரு கல் வந்து அன்னாரது தலையில் இருந்த இரும்புக் கவசத்தின் மீது விழுந்தது. அதனால் அன்னார் மயங்கி ஒரு பள்ளத்தினுள் விழுந்தார்கள். பிறகு ஒரு சஹாபி அதனை வெளியே எடுத்தார்கள். அதனால் அவர்களது பல் உடைந்தது. சில விஷமிகள் இஸ்லாமிய படைக்கு நஷ்டம் ஏற்படுத்துவதற்காக குழி தோண்டி வைத்திருந்தனர். அதன் மீது புற்களை பரப்பி வைத்திருந்தனர். இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விழுந்து விட்டார்கள்.

அதற்குப் பிறகு ஒரு சஹாபி ஷஹீதானார். அவரது உடல் அன்னாரது அருளுக்குரிய உடல் மீது விழுந்தது. உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற செய்தி மக்களிடம் பரவியது. எதிரிகளின் தாக்குதல் காரணமாக பின்தங்கிய சஹாபாக்கள் மீண்டும் எதிரிகளை விட்டு விலகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சூழ்ந்து கொண்டனர். அவர்களை குழியிலிருந்து வெளியே எடுத்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நினைவு திரும்பியது. அன்னார் நாலாபுறமும் மக்களை அனுப்பி முஸ்லிம்களை ஒன்று திரட்டி மலை அடிவாரத்தில் ஒன்று கூட்டினார்கள்.

இஸ்லாமிய படைக்கு மறுப்பவர்கள் மீது வெற்றி கிடைத்த பிறகு ஒரு தற்காலிக தோல்வி ஏற்படக் காரணம் ஒரு சிலரின் செயலாகும். இது நாம் புரிய வேண்டிய விஷயம். அவர்களில் ஒரு சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு மாற்றம் செய்தார்கள். அவர்கள் அன்னாரின் கட்ளையின்படி அமல் செய்வதற்குப் பதில் தமது கருத்தின்படி தமது விளக்கத்தின்படி வேலை செய்யத் தொடங்கினர். அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பின்னால் இதயத் துடிப்பை நாடி பின்தொடர்வது போன்று பின்தொடர்ந்து சென்றார்கள் எனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு கட்டளைக்காக முழு உலகத்தையும் தியாகம் செய்ய வேண்டி வந்தாலும் சரிதான்.

அவை அனைத்தும் ஒன்றுமற்றவை தான் என்று கருதி இருப்பார் எனில், அந்த மலை முகடுக்குச் செல்லும் பாதையை விட்டு அகன்றிருக்க மாட்டார்கள். அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு வழிகாட்டலுடன் நிலை நிறுத்தி இருந்தார்கள். நாங்கள் வென்றாலும் சரி கொல்லப்பட்டாலும் சரி. நீங்கள் இந்த இடத்திலிருந்து அசையக் கூடாது. அவ்வாறு செய்தால் எதிரிகளுக்கு மீண்டும் தாக்க வாய்ப்பும் கிடைத்திருக்காது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் சஹாபாக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டும் இருக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இந்த வசனத்தில் இவ்விஷயத்தைத்தான் கூறுகிறான்: முஸ்லிம்களுக்கு இக்கட்டளையின்படி செயல்படுமாறு கவனமூட்டுகிறான். எவர்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கட்டளைகளைப் பின்பற்றவில்லையோ தமது சொந்த விளக்கங்களுக்கு அன்னாரின் கட்டளையை விட முன்னுரிமை தருகிறார்கள். அன்னாரின் கட்டளைகளை பின்தள்ளுகிறார்களோ அவர்கள் பயப்பட வேண்டும். இதன் விளைவால் அவர்களுக்கு ஆபத்து வரலாம். கடும் தண்டனைக்கு அவர்கள் ஆளாகலாம்.

இங்கு கூறப்பட்டுள்ளது. நீங்கள் வெற்றி பெற விரும்பினால் உங்கள் பணி, நீங்கள் ஒரு கை உயரும்போது எழுங்கள். ஒரு கை தாழும்போது அமருங்கள். இந்த ஆன்மா உங்களிடம் இருக்கும் வரை முஸ்லிம்களும் உயிருடன் இருப்பர். இந்த ஆன்மா அழிந்த பிறகும் இஸ்லாம் உயிருடன்தான் இருக்கும். ஆனால் இறைவனது கரம் அம்மக்களை விட்டு அகன்று விடும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுதலிலிருந்து அகன்று விடும். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 410–412)

இன்றும் நாம் பார்க்கிறோம். இதுவே முஸ்லிம்களின் நிலையாகும். அல்லாஹ்வின் உதவி இவர்களை விட்டு போய் விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப வந்த மஹ்தி மஸீஹை ஏற்க வேண்டும். அவருக்கு அன்னாரின் ஸலாத்தை எட்ட வைக்க வேண்டும். அவரை நீதி நெறி தீர்ப்பவராகக் கருத வேண்டும். ஆனால் இந்த அனைத்திற்கும் அவர்கள் சுய விளக்கம் கொடுக்க ஆரம்பித்தனர். அதன் விளைவைப் பாருங்கள். இங்கு அஹ்மதிகளுக்கு ஒரு பாடம் உள்ளது.

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு முழுமையான கட்டுப்படுதல் தான் வெற்றிக்கு உத்திரவாதம் தரும். எனவே ஒவ்வொருவரும் தத்தமது நிலையை ஆய்வு செய்ய வேண்டும். எந்த அளவுக்கு நாம் கட்டுப்படுகிறோம் என்று பார்க்க வேண்டும். இங்கு முதலில் கூறப்பட்டது. அபூஸுஃபயானும் இக்ரிமா பின் அபீஜஹ்ல் மற்றும் இன்னொருவரை இன்னொரு சஹாபி பற்றியும் முஸ்லிஹ் மவ்வூது குறிப்பிட்டுள்ளார்கள். அவர் அம்ர் பின் ஆஸ் ஆவார்கள். இவர்கள் மலை முகட்டை நோக்கிச் செல்லும் பாதையில் தாக்குதல் தொடுத்தனர். சில அறிவிப்புகளில் இன்னும் சிலரது பெயர்களும் கூறப்பட்டுள்ளன. இது குறித்து வரலாற்றை ஆய்வு செய்யும் துறை ஆய்வு செய்ததில், வாழ்க்கை வரலாற்று நூல்களில் காலித் பின் வலீதுடன் இக்ரிமாவும் தாக்கியதாக வருகிறது என்று தெரிகிறது.

(ஷரஹ் ஸர்கானி தொகுதி 2 பக்கம் 412 கஸ்வா உஹது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் அத்துடன் இணைவைப்பவர்களின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களுள் ஒருவர் அம்ர் பின் ஆஸ் ஆவார் என்றும் வருகிறது.

(தாரீஹுல் ஹமீஸ் தொகுதி 2 பக்கம் 191 கஸ்வா உஹது – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த வகையில் காலித் பின் வலீது மலை முகட்டில் ஆள் இல்லை என்று பார்த்து அங்கு சென்று தாக்கச் சென்றார். இக்ரிமா பின்னாலேயே சென்றார். இந்த மூன்று விஷயங்களையும் ஒருபுறமாக பார்த்தால் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றுக்கும் மற்றவர்களின் கூற்றுக்கும் ஓர் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும். ஏனெனில் இணைவைப்பவர்களின் குதிரைப் படையின் தலைவராக அம்ர் பின் ஆஸ் இருந்தார். எனவே அவருடம் உடன் இருந்திருப்பார். அபூஸுஃப்யான், இக்ரிமா, அம்ர் பின் ஆஸ் மூவரும் அங்கு இருந்தனர். இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவிப்பில் எந்த முரண்பாடும் இல்லை.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் உடைய ஷஹாதத் சம்பவம் இவ்வாறாகும். காலித் பின் வலீது, இக்ரிமா பின் அபீஜஹ்ல் இருவரும் தாக்கினர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அம்பு எய்தார்கள். ஒரு நிலையில் அவர்களின் அம்புகள் தீர்ந்து விட்டன. அன்னார் பிறகு ஈட்டியால் தாக்கினார்கள். அது உடைந்து விட்டது. பிறகு அவர் வாளால் சண்டையிட்டார். ஷஹிதாகி விழும் வரை அவ்வாறே செய்தார். அவரை இக்ரிமா பின் அபீஜஹ்ல் ஷஹீதாக்கினார். அவர் கீழே விழுந்ததும் எதிரிகள் அவரை நெருங்கினர். அவரது உடலை மிகக் கடுமையாக அலங்கோலம் செய்தனர். அவர்களின் உடலை ஈட்டியால் எவ்வளவு கீறினார்கள் என்றால் அவர்கள் குடல் வெளியே வந்தது.

கவ்வாத் பின் ஜுபைர் கூறுகிறார்கள்: அப்துல்லாஹ் பின் ஜுபைருக்கு இந்த நிலை ஏற்பட்டபோது முஸ்லிம்கள் அங்கு சுற்றி வளைத்து சூழ்ந்து கொண்டனர். நானும் அவர்களுடன் இருந்தேன். கவ்வாது பின் ஜுபைர் கூறுகிறார்: ஒரு மனிதன் எங்கு சிரிக்கமாட்டானோ அங்கு நான் சிரித்தேன்; (தனது நிலையை அவர் குறிப்பிடுகிறார்). எங்கு ஒரு மனிதன் சிற்றுறக்கம் கொள்ள மாட்டானோ அங்கு நான்று சிற்றுறக்கம் கொண்டேன். எங்கு ஒரு மனிதன் கருமித்தனம் காட்டமாட்டானோ அங்கு நான் கருமித்தனம் காட்டினேன். (இந்த மூன்று விஷயங்களும் அப்படிப்பட்ட நிலைகளில் எந்தவொரு மனிதனிடமும் ஏற்பட முடியாது). என்ன நிலை எது? என்று கேட்கப்பட்ட போது கவ்வாது கூறினார்கள்.

நான் இரு விலாப்புறத்தையும் அபூஹன்னா இரு கால்களையும் பிடித்துக் கொண்டு அப்துல்லாஹ்வை தூக்கினோம். நான் எனது தலைப்பாகை துணியால் அவரது காயத்தைப் பொத்தினேன். நாங்கள் அவரை தூக்கிய போது இணை வைப்பவர்கள் ஒருபுறம் இருந்தனர். எனது தலைப்பாகை துணி அதிலிருந்து கீழே விழுந்தது. அப்துல்லாஹ் பின் சுபைரின் குடல்கள் வெளியே வந்தன. என்னுடன் இருந்தவர் திடுக்கிட்டார். எதிரிகள் அருகில் இருக்கிறார்கள். நான் திரும்பிப் பின்னால் பார்க்கும்போது எனக்கு சிரிப்பு வந்தது. பிறகு அதில் ஒருவர் ஈட்டியை எடுத்துக் கொண்டு முன்னோக்கி வந்தார். அவர் எனது கழுத்தை நோக்கி ஈட்டியைக் கொண்டு வருகிறார். அப்போது ஈட்டி அகன்று விட்டது.

(இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்த உதவியாகும். அந்த சிற்றுறக்கம் ஏன் வந்தது? அல்லாஹ்வின் புறமிருந்து வந்தது. அந்த நிலையில் நான் எதுவும் செய்ய முடியாதிருந்தது. ஈட்டி கழுத்துக்கு அருகில் வந்து விட்டது. தூங்கி விழித்ததால் அது விலகியது.) பிறகு நான் அப்துல்லாஹ் பின் சுபைருக்காக கபர் தோண்டினேன். அப்போது என்னிடம் எனது வில் இருந்தது. பாறை கடுமையாக இருந்தது. நாங்கள் உடலை ஒரு பள்ளத்தில் இறக்கினோம். நான் எனது வில்லின் நுனியால் கபரை தோண்டினோம். அதில் ஒரு கொண்டி வைத்து இணைக்கப்பட்டிருந்தது. நான் வில்லை வீணாக்க விரும்பவில்லை என்று கூறினேன். பிறகு நான் அதனை கழற்றினேன். பிறகு வில்லால் கபரை தோண்டி அதில் அப்துல்லாஹ் பின் சுபைரை அடக்கினோம்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 362–363 அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு அல்லாஹ் அப்துல்லாஹ் பின் ஜுபைர் மற்றும் அவருடன் இருந்தவர்களை கட்டளையின் ஆன்மாவை புரிந்து பற்றுறுதிமிக்கவர்களாக ஆக்கி இருந்தான். அவ்வாறே நமக்கு அல்லாஹ்வின் அருளால் கட்டளையினைப் புரிந்து கட்டுப்படக் கூடியவர்களாக ஆக்கி இறைவனது அருளுக்கு நிரந்தர வாரிசாவோமாக.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். அது கனடாவின் நாதிருல் ஹுஸ்னி சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 20 டிசம்பர் அன்று தமது 85 –வது வயதில் இறை நியதியால் வஃபாத் ஆனார்கள். انا للہ وانا الیہ راجعون

அன்னார் ஸாலிஹான களங்கமற்ற நல்லடியார். கண்ணியமிக்கவர். இவரது பொருள் தியாகமும் கூறத்தக்கது. வஸிய்யத் செய்தவர் ஆவார். இவரது நினைவாக மனைவியும் மகனும் உள்ளனர். மனைவி அஹ்மதி ஆகவில்லை. அப்துர் ரவூஃப் ஹுஸ்னி அவரது மகன் ஆவார்கள். 1938 –ல் தமது சகோதரர் முனீருல் ஹுஸ்னி சாஹிபிற்கு பிறகு பைஅத் செய்தார். அப்துர் ரவூஃப் அவர்களும் தூய, அமைதியான இயல்புடைய இறையச்சமுடைய மனிதராவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சிரியாவுக்குச் சென்றபோது அப்துர் ரவூஃப் ஹுஸ்னி சாஹிப் வீட்டில் விருந்திற்கு சென்றார்கள். நாதிருல் ஹுஸ்னி சாஹிபிடமும் தந்தையின் நல்லியல்புகள் இருந்தன. களங்கமின்மை மற்றும் பற்றில் நல்ல முன்மாதிரியைக் காட்டினார்கள்.

கனடாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: மஸ்ஜிது பைத்துல் இஸ்லாம் கட்டப்பட்டதிலிருந்து ஒவ்வொரு ஜுமுஆவுக்கும் 4 மணி நேரம் டிரைவ் செய்து தொடர்ந்து பள்ளிவாயிலுக்கு வந்து விடுவார். அதே நாளே திரும்பி சத்பரியிலுள்ள தமது வீட்டிற்கு திரும்பிச் செல்வார். ஜுமுஆ முடிந்து ஓய்வு எடுத்து மறுநாள் செல்லுங்கள் என்று அவரிடம் பலமுறை கூறினேன். அன்னார் தமக்கே உரிய பாணியில் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு காரணம் கூறி புறப்பட்டு விடுவார்கள்.

ஜமாஅத்தின் மீது எந்த ஒரு சுமையும் வந்து விடக் கூடாது என்று கருதுவார்கள். இந்த நடைமுறையை தமது கடைசி நோயிலும் கூட கடைபிடித்தார்கள். ஜுமுஆ தொழுகைக்கு வந்து பாங்கு கூறும் வழக்கம் இருந்தது. அவர் சொல்லும் முறையும் தனிப்பட்ட முறையில் நன்றாக இருக்கும். கேட்பவர்களுக்கு அது தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

மர்ஹூமின் அஹ்மதி அல்லாத மனைவி சுமையா சாஹிப் கூறுகிறார்: அல்லாஹ் நாஸிருல் ஹுஸ்னி சாஹிபுக்கு தனது பரந்த சொர்க்கத்தில் இடம் தருவானாக. இவர் தமது வீட்டினருக்கும் ஜமாஅத்திற்கும் உண்மையாளராகவும் நேர்மையானவராகவும் இருந்தார். தேவை உடையவர்களின் தேவையை நிறைவேற்றி வந்தார். அவர்களிடம் மிகவும் கனிவுடன் நடப்பார். ஓர் அஹ்மதி அல்லாத ஏழை பெண்ணுக்கு தன்னால் இயன்ற மறைமுகமான உதவி செய்து வந்தார். மர்ஹூம் நாஸிர் சாஹிப் அவரை சந்திக்கச் சென்றால் பஜாருக்குச் சென்று தேவையானவற்றை வாங்கிக் கொண்டு செல்வார். அவரைப் போன்று நோயுற்ற நிலையில் பொறுமை கொண்டவரை கண்டதில்லை. எப்போதும் அல்ஹம்துலில்லாஹ் என்ற சொல் நாவில் வந்து கொண்டே இருக்கும். இறையச்சத்துடன் நிறைந்த உள்ளத்துடன் இறைவனுடன் வேண்டுவார்கள். ஐவேளை தொழுகை, தஹஜ்ஜுத் இவற்றை பேணி வந்தார். அறிந்த ஒவ்வொருவரும் அவர்களது நேர்மையைக் கூறுவர்.

கனடாவின் முஃதஸ் கஸஸ் சாஹிப் கூறுகிறார்: சிரியாவில் தங்கியிருந்தபோது நாஸிருல் ஹுஸ்னி சாஹிப் பற்றி கேள்விப்பட்டேன். ஹுஸ்னி குடும்பம் ஜமாஅத்துடன் மிகவும் பிடிப்புடன் இருப்பதில் புகழ் பெற்றது என்று அறிந்திருந்தேன். கனடா வந்த பிறகு பள்ளிவாயிலில் நாஸிருல் ஹுஸ்னி சாஹிபுடன் சந்திப்பு நிகழ்ந்தது. மிகவும் நல்லியல்புகள் சிரித்த முகத்தை உடைய மனிதர் ஆவார். இவருடன் பேசும்போது கிலாஃபத்துடனான அன்பு மற்றும் பள்ளிவாயிலில் நண்பர்களுடன் சந்திப்பில் இருந்த ஆர்வம் ஆகியவை மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இவர் தொழுகையில் பேணுதல் நம் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணம் ஆகும். அதிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்: இவர் மரணித்த பிறகு இவரது மனைவி மகன் டொரண்டோ வந்தார்கள். ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் அவர்களுக்கு பணிவிடை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அவரது கஃபன் மற்றும் அடக்கம் ஆகியவற்றிற்கு உதவி செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

அவரது மனைவி கூறினார்: எமது பகுதியில் மூன்று பள்ளிவாயில்கள் உள்ளன. அனைத்தும் முஸ்லிம் பள்ளிவாயில்கள். மூன்று பள்ளிவாயிலின் மக்களும் அன்னாரது ஜனாஸா சம்பந்தமாக என்னிடம் கேட்டார்கள். அவர்களிடம் கூறினார். அவர் ஓர் அஹ்மதி அல்லாதவர். அவர் கூறுகிறார்: நான் அவர்களிடம், அவர் எந்த பள்ளிவாயிலில் தொழுது வந்தாரோ அதே பள்ளிவாயிலில் தான் அவரது ஜனாஸா எழ வேண்டும்.

அவர் கபரில் இறக்கப்படும்போது கஸக் சாஹிப் கூறுகிறார். தமது சிறிய தந்தை சாமி கஸக் சாஹிப் ஒரு விஷயத்தை நினைவுபடுத்தியபோது கண்களில் கண்ணீர் வந்து விட்டது. மரண நோயில் இருக்கும்போது அருகில் இருந்தேன். கஸக் சாஹிபின் சச்சா மரணமடையும்போது அழுது கொண்டே சொன்னார். ஸய்யிதினா அமீருல் முஃமினீன் அவர்களிடம் தெரிவியுங்கள். எனக்கு அன்னாரிடம் அன்பு உள்ளது. நான் வாழ்வில் கடைசி நிமிடம் வரை கிலாஃபத்துடன் பற்றுடன் இருப்பேன். இவ்விஷயங்கள் அநேகமாக மூன்றாவது கிலாஃபத்தின் காலத்தில் நடந்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் இது அன்னாரின் வார்த்தைகள் ஆகும். மர்ஹூம் நாதிர் சாஹிப் பற்றியும் கஸக் சாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூம் நாதிர் சாஹிப் அவர்களின் நிலையும் இதுதான் என்பது நான் பெற்ற தாக்கமாகும். அன்னாரும் கிலாஃபத்துடன் பெரும் பற்றுறுதி கொண்டவர்கள் ஆவர். அவ்வாறான மனிதர்களைத்தான் அல்லாஹ்வின் வார்த்தை உண்மைப்படுத்துகிறது.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ - وَمَا بَدَّلُوْا تَبْدِيْلًا

பிறகு கலீஃபாக்களுடன் கஸக் சாஹிப் அன்பு தொடர்பு வைத்திருந்தார்கள். 1955 –ல் முஸ்லிஹ் மவ்வூது சிரியா சென்றபோது அவர்களுக்கு ஹுஸூருடைய நட்பு கிடைத்தது. 3 மே 1955 –ல் சிரியா

அஹ்மதிகளுடன் சந்திப்பு நிகழ்ந்த போது முஸ்லிஹ் மவ்வூது அவரிடம் அரபியில் பேசினார்கள். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பு பற்றி கூறினார். இந்த சந்திப்பு வரலாற்றுச் சிறப்புள்ளது.

எனவே அன்னார் கூறினார்கள்: இந்த அமர்வுக்கு நீண்ட காலம் முன்பு உங்களில் பலர் பிறந்து கூட இருக்க மாட்டீர்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் வஹி அருளியிருந்தான்.

يَدْعُوْنَ لَكَ اَبْدَالُ الشَّامِ وَ عِبَادُاللّٰهِ مِنَ الْعَرَبِ

சிரியாவைச் சேர்ந்த அப்தால்களும் அரபிகளும் ஆக இருப்பவர்களில் உள்ள நல்லடியார்கள் உமக்காக துஆ கேட்பார்கள். முஸ்லிஹ் மவ்வூது அவர்களிடம் கூறுகிறார்கள். இப்போது உங்களிடம் உங்கள் முன் இறைவனின் வார்த்தை நிறைவேறி விட்டது. இந்த பயணத்தின்போது முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றும் நாஸிருல் ஹுஸ்னி சாஹிபுடைய நினைவு கூரத்தக்க புகைப்படங்கள் அவரிடம் உள்ளது.

அவரது சகோதரியின் மகன் அம்மாருல் மிஸ்கி சாஹிப் இங்கு இலண்டனில் இருக்கிறார். அவர் கூறுகிறார்:

ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபுடன் நெருங்கிய பழக்கம் இருந்தது. மர்ஹூம் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் நூல் ஒன்றை அரபியில் மொழிபெயர்த்தார்கள். ஜமாஅத்துடன் அன்னாருக்கு உறுதியான தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது மற்றும் கலீஃபாக்கள் பற்றி விரும்பத்தகாத வார்த்தைகளை சகிப்பதில்லை. ஒருமுறை அன்னாரது இரு சகோதரர்களுடன் ஓர் அஹ்மதி அல்லாதவருக்காக இரங்கல் தெரிவிக்கச் சென்றார். அங்கு சிரியாவின் ஒரு பிரபல ஆலிம் சேக்கின் அல்பானி தமது நிறைய மாணவர்களுடன் வந்திருந்தார். அவருக்கு நாஸிருல் ஹுஸ்னி மற்றும் அவரது சகோதரர்கள் அஹ்மதிகள் என்பது தெரியும்.

அவர் அஹ்மதி மற்றும் பிற முஸ்லிம்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு குறித்து பேச ஆரம்பித்தார். ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி விரும்பத்தகாத வார்த்தை கூறியபோது எனது மாமா மர்ஹூம் நாஸிருல் ஹுஸ்னி சாஹிப் கூறினார்: உங்களில் எவருக்காவது முடிந்தால் என்னுடன் விவாதத்திற்கு வாருங்கள் பார்ப்போம். சேக் அல்பானி சாஹிபுடன் 15 பேருக்கு மேல் இருந்தனர். ஹுஸ்னி சாஹிபுடன் சேர்த்து இவர்கள் மூவர்தான் இருந்தனர். அவர்களில் எவருக்கும் இவர்களுடன் வாக்குவாதம் செய்ய தைரியம் வரவில்லை. மாறாக, சண்டையை தொடங்கினர். மூவரையும் தாக்க முயன்றனர். இரங்கலுக்கு வந்த மற்றவர்கள் தடுத்து விலக்கினர்.

இவர்கள் படிக்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது பற்றி எடுத்துச் சொல்ல கிடைக்கும் எந்த வாய்ப்பையும் விடமாட்டார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் இஞ்சினியரிங் படிக்க அமெரிக்கா சென்றார். இறுதி வருடம் படிக்கும் போது ஒரு யூத பிரிவைச் சேர்ந்தவருடன் முறைப்படி வாதம் தொடங்கியது. அவரிடம் எந்த ஆதாரமும் இல்லை. பிரின்ஸிபலிடம் சென்று இவரை கல்லூரியை விட்டு வெளியேற்றுங்கள். இல்லை என்றால் நாங்கள் இவர் மீது பெரும் பழியைப் போடுவோம். படிப்பைத் தொடர முடியாது என்றனர்.

எவ்வாறிருப்பினும் பிரின்ஸிபல் சொல்லியதும் தாமே கல்லூரியை விட்டு விட்டு அமெரிக்காவிலிருந்து கனடா வந்து விட்டார். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கலீஃபாக்களின் நூல்களில் முழு கவனம் செலுத்தினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி நூல்களை தமது குரலில் வாசித்து பதிவு செய்துள்ளார். உருது படிக்க முயற்சி செய்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பார்ஸி கவிதைகளை அரபியில் மொழிபெயர்க்கவும் செய்துள்ளார். தமது அரபி மற்றும் ஆங்கில மொழித் திறமைகளையும் செலவழித்து மொழியாக்கம் செய்துள்ளார். ஐந்து பாகங்களைக் கொண்ட ஆங்கில விரிவுரையின் அரபி மொழியாக்கக் குழுவில் அன்னார் இருந்தார். இஸ்லாமிய எதிரிகளுக்கு பதில் கூறும் வகையில் சில நூல்களையும் அரபியில் எழுதியுள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களிலிருந்து பயன் பெற்றவாறு அதனை செய்தார்கள். ரஸூலே ஆதம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய தோற்றம் தொடர்பான நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இவரது சொந்த நூலகம் ஒன்று இஸ்லாமிய நூல்களை உள்ளடக்கியதாக இருந்தது. தமது வஃபாத்திற்குப் பிறகு இவற்றை ஜமாஅத்திடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று வஸிய்யத்தும் செய்துள்ளார்.

அப்துல் காதர் வஹ்தே சாஹிப் கூறுகின்றார்கள்: இவர்கள் ஜமாஅத் பற்றி சில நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றை தமது சொந்த செலவில் வெளியிட்டும் உள்ளார்கள். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் மீது மிகவும் அன்பு கொண்டவர். சந்தா சம்பந்தமாக மக்களிடம் தெளிவுபடுத்துவார்.

இன்சார்ஜ் முரப்பி கனடா ஜாமிஆவின் ஆசிரியர் அப்துர் ரஸ்ஸாக் பராஸ் சாஹிப் கூறுகிறார்: அன்னார் பெரும் பொறுமைசாலியும் நன்றி செலுத்துபவரும் ஆவார். கடந்த சில வருடங்கள் நோயினால் உணவை வாய் மூலம் உண்ண முடியாமல் இருந்தது. மிஷின் மூலமாக உணவு இரப்பைக்கு செலுத்தப்பட்டது. இந்நிலையிலும் கூட உடம்பு சற்று சரியானாலும் ஜுமுஆவுக்கு பள்ளிவாயிலுக்கு வந்து விடுவார். சிரியாவில் நிலைமை மோசமானபோது அங்கிருந்த அஹ்மதிகள் கனடா வந்தார்கள். அவர்களை அன்பு நேசத்துடன் சந்திப்பார்கள். ஜமாஅத்துடன் இணைந்திருக்குமாறு அவர்களிடம் கூறுவார். இந்த நாட்டில் உங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற ஒரே வழி ஜமாஅத்தோடும் பள்ளிவாயிலோடும் அவர்களை இணைப்பதுதான் என்று கூறுவார்கள்.

கனடாவின் முரப்பி முஸ்லிஹுத்தீன் ஷமூர் சாஹிப் கூறுகிறார்: நாதிர் ஹுஸ்னி சாஹிப் காலத்தின் கலீஃபாவின் குத்பாவை கேட்டு விட்டு அதனை பிரிண்டு எடுத்து மீண்டும் படித்து விட்டு அதனை ஒரு பையில் ஒன்று சேர்த்து வைப்பார். வீட்டில்ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அரபி நூல்களையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது தஃப்ஸீரே கபீரின் 10 பாகங்களையும் தமது குரலில் பதிவு செய்து பாதுகாத்துள்ளார். ஜுமுஅவுக்குச் செல்லும் போதும் வரும்போதும் மக்களை கேட்கச் செய்வார். சில வேளை திலாவத்தை கேட்பார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபாவின் குர்ஆன் தர்ஸ் M.T.A –வில் ஒளிபரப்பானபோது அதனையும் பதிவு செய்து பாதுகாத்தார்.

அவர் கூறுகிறார்: நான் பலமுறை அவரது வீட்டிற்குச் சென்றுள்ளேன். எப்போதும் ஃபஜ்ர் தொழுகை ஒரு மணி ஒன்றரை மணி நேரங்கள் முன்பாக எழுந்து அழுது தொழும் சப்தம் கேட்டுள்ளேன். அவர்கள் டி.வி பார்ப்பது என்றால் M.T.A மட்டும் பார்ப்பார்கள். டி.வி பழுதடைந்து விட்டால் உடனேயே தகவல் சொல்லி அனுப்புவார். அதனை சரிசெய்ய வேண்டும். அது இல்லாமல் வாழ்வது கஷ்டம் என்று கூறுவார்.

சமூர் சாஹிப் மேலும் கூறுகிறார்: தொழுகையில் இந்த துஆவை செய்து வந்தார். اَللّٰهُمَّ اَتْمِمْ عَلَيْنَا نِعْمَةَ الْخِلَافَةِ அதாவது அல்லாஹ்வே! எம்மை கிலாஃபத்தின் பரக்கத்திலிருந்து மிகச் சிறந்த பயன் அடையச் செய்வாயாக. இந்த துஆவை செய்யும் போதெல்லாம் அழத் தொடங்கி விடுவார். இந்த சம்பவம் என் முன் பலமுறை நடந்துள்ளது.

அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக. அவரது மகன் மற்றும் மனைவிக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வருவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அவர்களுக்காக அவர் செய்த துஆ அனைத்தையும் ஏற்பானாக.

# “அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனை”

ஏப்ரல் 1984 –இல் நடந்தவற்றைச் சற்றே திரும்பி பார்ப்போம். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்களது இலண்டன் வருகையினால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமானது. பாகிஸ்தானிலுள்ள ரப்வாவிலிருந்து இலண்டன் நகருக்கு அவர்கள் இடம் பெயர்ந்தது நாம் இன்று நினைப்பது போல அவ்வளவு எளிதான காரியமல்ல. ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் முழு ஜமாஅத்திற்கும் எத்தனை எத்தனை சவால்கள் ஏற்பட்டன. இப்போது நாம் அந்த ஏப்ரல் மாதத்தின் இக்கட்டான நாட்களில் பயணித்தவர்களாக அன்று நிகழ்ந்த முக்கிய சம்பவங்களை வரிசைக்கிரமமாக எடுத்துக் காட்டுவோம். (ஆசிரியர்)

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து இங்கிலாந்துக்கு இடம்பெயர்ந்து செல்லுதல்**

**26.04.1984:** பாகிஸ்தானில் அஹ்மதிகளுடைய நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தது. அவை மதிப்பீடு செய்யப்பட்டன; கூட்டங்கள் நடத்தப்பட்டன. கலீமுல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஒருநாள் வரப்போகும் சட்டம் XX பற்றி முன்பாக தெரிந்து கொண்டு ரப்வாவுக்கு திரும்பிச் சென்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்களைச் சந்தித்து அதனை எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கலீமுல்லாஹ் கான் சாஹிபிடம், லாஹூருக்குச் சென்று அங்குள்ள ஜமாஅத்தின் தலைவர் சவுத்ரி ஹமீத் நஸருல்லாஹ் சாஹிபிடம் இது பற்றி விளக்கும்படி கூறினார்கள்.

சவுத்ரி ஹமீத் நஸருல்லாஹ் சாஹிப் அவர்கள் அஹ்மதி வழக்கறிஞர்களுடன் ஒரு கூட்டம் நடத்தி அதன் அறிக்கையை மறுநாள் சமர்ப்பித்தார்கள். நடைமுறைக்கு வரப்போகும் இந்த சட்டம் XX குறித்து பாகிஸ்தான் வானொலியில் மாலை 8 மணிக்கு தேசிய செய்திகளில் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக ரப்வாவில் அவசரக் கூட்டம் தொடர்ந்து இரவு நீண்ட நேரம் நடந்தது.

**27.04.1984:** பாகிஸ்தானிலுள்ள பல்வேறு ஜமாஅத்துகளின் பிரதிநிதிகள் ரப்வாவுக்கு வரத் தொடங்கினார்கள். விரிவான முறையில் அமைக்கப்பட்ட கமிட்டி, துணைக்கமிட்டி மூலமாக கலந்தாலோசித்தல் நடைபெற்றது.

ஒரு கமிட்டி, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் இடம் பெயர்தலுக்கான வாய்ப்பினை ஆராய மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களது தலைமையில் உருவாக்கப்பட்டது. இந்த கமிட்டி ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து செல்வதற்குச் சிபாரிசு செய்தது. ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் இச்சட்டம் இயற்றப்பட்டால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா என்ற முறையில் அவர்களால் எந்த பணியையும் மேற்கொள்ள இயலாது. அப்போதைய வகீலுத் தஃப்ஸீர் மஸ்வூது ஜஹலமி சாஹிப் அவர்கள் பயணத் திட்டத்தை வகுப்பதற்காக கராச்சி புறப்பட்டார்கள்.

**28.04.1984:** ஹுஸூர் (ரஹ்) அவர்களின் பயண ஏற்பாடுகள் இறுதி செய்யப்பட்டன. Brigadier Waqiuz Zaman சாஹிப் இந்த பயண ஏற்பாடுகளைச் சரி பார்த்தார்கள். ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் விமானப்பயணத்தை மஸ்வூது ஜிஹ்லமி சாஹிப் நிர்வகிக்க வேண்டும். சவுத்ரி ஹமீத் நஸருல்லாஹ் சாஹிப் ரப்வாவிலிருந்து கராச்சி வழிப்பாதையில் செல்ல கார்களையும் ஓட்டுனர்களையும் ஏற்பாடு செய்ய வேண்டும். கராச்சி ஜமாஅத்தின் அமீர் சவுத்ரி அஹ்மது முக்தார் சாஹிப் கராச்சியிலிருந்து வெளியேறும் ஏற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டும். Brigadier Waqiuz Zaman சாஹிப் மற்றும் சவுத்ரி ஹமீது நஸருல்லாஹ் சாஹிப் ஆகிய இருவரும் ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களுடன் இலண்டன் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டனர். சவுத்ரி அஹ்மது முக்தார் சாஹிப் அவர்கள் அன்று மாலையிலேயே கராச்சி சென்று ஷக்கரிலிருந்து (பஞ்சாப் – சிந்து மாகாணங்களின் எல்லையில் உள்ளது) தொடங்கும் பயணத் திட்டம் பற்றியும், இடையில் வாகன நிறுத்தம் குறித்தும் ஆலோசனை நடத்தினார்கள்.

ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கராச்சி செல்லும் போது இடையில் தங்கும் ஏற்பாட்டை சர்தஸ்த் முனீர் சாஹிப் (அப்போதைய காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்முதிய்யா, கராச்சி) அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரம் ராஜா ஷாஹித் அஹ்மது சாஹிப் மற்றும் ராஜா நாஸிர் அஹ்மது சாஹிப் ஆகிய இருவரும் கராச்சி விமான நிலையத்தில் அனுமதிச் சான்றைப் பெற பொறுப்பாளர்களாவர். லாஹூரிலிருந்து வந்த ஓட்டுனர்கள் தம் வாகனங்களுடன் மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப், மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் ஆகிய இருவருடைய வீட்டிலும் தங்கினார்கள்.

தஹ்ரீகே ஜதீதின் தனிப்பட்ட காரில் பயணம் செய்த ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது இல்லத்திலிருந்து (Qasr-e-Khilafat) புறப்பட்டு அல்புஷ்ரா என்னும் மிர்ஸா ஹமீத் அஹ்மது சாஹிப் அவர்களது வீட்டை இரவு 11 மணிக்கு வந்தடைந்தார்கள். மிர்ஸா குர்ஷீத் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த காரை ஓட்டினார்கள். மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் பயணி இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். ஹுஸூர் (ரஹ்) அவர்களும், துணைவியாரும், இரு இளைய பெண்மக்களும் பின்புற இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது இல்லத்திலிருந்து அல்புஷ்ரா எனும் வீடு வரையுள்ள இந்த சிறிய பயணத்தின் போது தொப்பி அணிந்திருந்தார்கள். டர்பன் அணியவில்லை. இரகசியமான விஷயங்கள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், மிர்ஸா ஹமீது அஹ்மது சாஹிப் அவர்களது வீட்டில் அன்றிரவு யார் தங்கியிருப்பார்கள் என்ற தகவலும் அவருக்கு சொல்லப்படவில்லை.

மிர்ஸா குர்ஷீத் அஹ்மது சாஹிப் மற்றும் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் ஆகியோரின் தாயார் அந்த காலகட்டத்தில் மிகவும் உடல்நலம் குன்றி இருந்தார்கள். எனவே அந்த இரவு வேளையில் வாகனங்களின் போக்குவரத்து வழக்கத்திற்கு மாறாக அந்த வீட்டைச் சுற்றி இருந்ததும் கூட பார்வையாளர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் இந்த அமைதியற்ற சூழல் குறித்த வேறு எந்த எண்ணமும் வரவில்லை. வரலாறு போற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இந்த இடமாற்றம் பாகிஸ்தானிலிருந்து இங்கிலாந்துக்கு அடுத்த நாள் காலையில் ஆரம்பமானது.

**29.04.1984:** இந்நாளில் அதிகாலைப் பொழுதில் வரலாற்றுச் சிறப்புமிக்க அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இட மாற்றம் பாகிஸ்தானிலிருந்து இங்கிலாந்துக்கு தொடங்கியது. வாகனங்கள் பயணக் குழுவினருடன் ரப்வாவை விட்டு அதிகாலையில் புறப்பட்டன.

கார் 1: சர்தார் அப்துஸ் ஸமீஃ (லாஹூர்), மலிக் சுல்தான் ஹாரூன் கோட் ஃபதீஹ் கான் (டேடோக்), ஷேக் அமீர் அஹ்மது (லாஹூர்), சவுத்ரி இத்ரீஸ் நஸருல்லாஹ் கான் (ஓட்டுனர்)

கார் 2: ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது ரஹிமஹுல்லாஹ் அவர்கள், ஹஸ்ரத் ஸய்யிதா ஆஷிஃபா பேகம் சாஹிபா, ஹுஸூர்

ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இரு இளைய மகள்கள், சவுத்ரி ஹமீது நஸருல்லாஹ் கான் சாஹிப் (ஓட்டுனர்)

கார் 3: பிரிகேடியர் வாக்கிஸ் ஸமான், ஷேக் முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் (ஓட்டுனர்), ஷேக் சயீது அஹ்மது, மலிக் ஃபாரூக் அஹ்மது (துணை ஓட்டுனர்).

கார் 4: மிர்ஸா குர்ஷீது அஹ்மது (சத்ர், அஞ்சுமன் அஹ்மதிய்யா பிரதிநிதி), மிர்ஸா முஜீப் அஹ்மது (ஓட்டுனர்), மிர்ஸா லுக்மான் அஹ்மது, ஃபாயிஸா பேகம், மிர்ஸா உஸ்மான் அஹ்மது.

மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்கள் ஹுஸூர் அவர்களுக்கு புறப்படுவதற்கான நேரம் ஆகி விட்டது என்ற தகவலை அனுப்பும் போது அவர்கள் தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருந்தார்கள்.

ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 10 நிமிடம் கழித்து வந்து காரில் அமர்ந்தார்கள். அவர்கள் வெண்ணிற ஆடையும், மேல் அங்கியும், தொப்பியும் அணிந்திருந்தார்கள். இந்த பயணக்குழு காலை 4 மணிக்கு ரப்வாவிலிருந்து புறப்பட்டது. 4 கார்களில் 3 கார்கள் ஒன்றாகப் புறப்பட்டன. வழிகாட்டும் கார் முதலாவதாக சர்கோதா சாலைக்குச் சென்று, பின் அங்கிருந்து பிரதான சாலையில் இந்த 3 வாகனங்களுடன் இணைந்து கொள்ளும்.

சர்கோதா நோக்கி இந்த பயணக்குழு சென்று, பின் இடப்புறம் திரும்பி லாலியானுக்கு முன்பாக டர்கன்வாலா செல்ல வேண்டும். இந்த சிறிய சாலை சர்கோதா – ஜங்க் சாலையில் இன்னும் கீழ்ப்புறமாகச் சென்று இணையும்.

முன்பாக, ரப்வாவில் இருக்கும் போது ஹுஸூர் (ரஹ்) அவர்கள், இராணுவப் பிரிவைச் சார்ந்த ஒற்றன் ஏழையைப் போன்று மாறுவேடத்தில் இருந்த ஆனால் கால்களில் பட்டாளத்திற்குரிய பூட்ஸ் அணிந்திருந்ததைச் சுட்டிக் காட்டினார்கள். அதிகமான ஒற்றர்கள் லாலியானுக்கும் ஜங்க்கிற்கும் இடையில் இருப்பதைக் காண முடிந்தது.

புறப்பட்டு ஒரு மணி நேரம் கடந்த பின் மிர்ஸா மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஒரு காரை, அந்த பயணக் குழுவிலிருந்து ஒரு மணி நேர தூர இடைவெளியில் சென்று கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி அனுப்பினார்கள்.

சுக்கூர் என்ற இடத்திற்கு சுமார் 80 மைல்களுக்கு முன்பாக கார் எண் 4 ன் டயர் பஞ்சர் ஆனது. அதனால் பயணம் நிறுத்தப்பட்டது. அப்போது முன்பாக இருக்கும் காரில் ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடமிருந்து மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்கள் ஒரு தகவலைப் பெற்றார்கள். அதில் உணவை சாலையோரத்திலுள்ள Dhaba - உணவகத்திலிருந்து வாங்கும்படி கோரப்பட்டிருந்தது. அதன்படி உணவு வாங்கப்பட்டது.

மதிய உணவுக்காக இப்பயணக்குழு 2 மணியளவில் சுக்கூர் புறவழிச்சாலை அருகில் நின்றது. ஏற்கனவே வாங்கப்பட்ட உணவு மதிய உணவாக பரிமாறப்பட்டது. அங்கேயே தொழுகை நிறைவேற்றப்பட்டது. இத்தருணத்தில் கராச்சியிலிருந்து 3 கார்கள் இணைந்து கொண்டன. இங்கிருந்து பயணக்குழுவிற்கு வழிகாட்டிச் சென்றன. பயணக்குழு கராச்சிக்கு சூரியன் மறையும் சமயத்தில் சேர்ந்தது. மலிர் சுங்கச்சாவடி அருகே ஒரு சிறிய நிறுத்தம். சில கலந்தாலோசனைக்குப் பின் பயணக்குழு இரண்டாகப் பிரிந்து தங்குமிடத்திற்குச் சென்றன.

ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களோடு செல்லும் 3 கார்கள் கலீமுல்லாஹ் கான் சாஹிப் வீட்டிற்கும், ஏனையவை Defence பகுதியில் உள்ள ஷேக் அப்துல் மஜீது சாயிப் அவர்களது வீட்டிற்கும் சென்றன. அதன் பிறகு மஸ்வூது ஜஹ்லமி சாஹிப் அவர்கள் (வகீலுத் தஃப்ஸீர்) மற்றும் ராஜா ஷாஷிது சாஹிப் ஆகிய இருவரும் பயணிகள் புறப்பட ஏதுவாக பாஸ்போட்டுடன் விமான நிலையம் சென்றனர். இலண்டன் செல்லக்கூடிய 6 நபர்களும் விமான நிலையம் வந்து சேருவதற்கு முன்பாகவே அவர்களது பாஸ்போர்ட் பயணம் செய்ய தயார் நிலையில் இருந்தது. (அப்போது UK செல்ல Visa தேவையில்லை).

முன்னெச்சரிக்கையாக ஹுஸூர் (ரஹ்) அவர்களின் பாஸ்போர்ட் தனியாக தணிக்கை செய்யப்பட்டது. அவர்களின் பாஸ்போர்ட்டில் தெளிவாக அவர்களது பதவி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் “Head of the Ahmadiyya Movement” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

Zartasht Munir சாஹிப், மலிக் ஃபாரூக் சாஹிப், மிர்ஸா முஜீப் அஹ்மது ஆகியோரும் விமான நிலையம் வந்தனர். பணியிலுள்ள Immigration Officer ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பாஸ்போட்டிலுள்ள எல்லா விபரங்களையும் சரி பார்த்த பிறகு அதில் முத்திரை பதித்தார். வெளிநாடு செல்ல தெளிவான சான்று வழங்கப்பட்டது.

Brigadier Waqiuz zaman சாஹிப், சவுத்ரி ஹமீது நஸருல்லாஹ் சாஹிப் மற்றும் ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இரு பெண் குழந்தைகள் ஆகியோர் விமான நிலையத்திற்கு ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்களும், ஹஸ்ரத் ஆஷிஃபா பேகம் சாஹிபா அவர்களும் வருவதற்கு சுமார் அரை மணி நேரம் முன்பாக வந்திருந்தனர்.

ஹுஸூர் (ரஹ்) அவர்களும், ஹஸ்ரத் ஆஷிஃபா பேகம் சாஹிபா அவர்களும் காலை 1:25 மணிக்கு கராச்சி விமான நிலையம் வந்தார்கள். நேரடியாக VIP Lounge சென்றார்கள். விமானம் காலை 2 மணிக்கு புறப்படுவதாக இருந்தது.

ஹுஸூர் (ரஹ்) அவர்கள் தங்களின் வழக்கமான உடையாகிய Sherwani (Overcoat), டர்பண் அணிந்திருந்தார்கள். அவர்களின் பெயர் இரண்டு முறை VIP Lounge புத்தகத்தில் அவர்களது பதவியோடு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் “Head of the Ahmadiyya Movement” என்றும் எழுதப்பட்டிருந்தது.

சில ராணுவ அதிகாரிகள் VIP Lounge பகுதியை உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டிருந்தனர். இது சற்றே அதிர்ச்சியைத் தந்தது. எனினும் அவர்கள் ஒரு ஆப்ரிக்க அதிகாரியின் பாதுகாப்பு அணியினர் எனத் தெரிய வந்தது. விமானம் 30 நிமிடம் தாமதமாக தரை இறங்கியதால் Boarding சமயமும் 30 நிமிடம் கூடுதலாயிற்று.

விமானம் புறப்பட்டு 30 நிமிடங்களுக்குப் பின், விமானம் கராச்சி விமான நிலைய கட்டுப்பாட்டு டவரின் சமிக்ஞைகளை இழந்தது. இதன் பொருள் விமானம் பாகிஸ்தான் விமான எல்லைகளைக் கடந்து விட்டது. இதனை பாகிஸ்தான் அதிகாரிகள் திரும்ப அழைக்க முடியாது. இந்த உத்திரவாதம் கிடைத்தபின், ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் புறப்பட்டுச் சென்றதைக் கண்ட மற்ற உறுப்பினர்கள் விமான நிலையத்திலிருந்து திரும்பினார்கள்.

**30.04.1984:** முதலாவதாக ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அம்ஸ்டெர்டாம் சென்று, சிறிது நேரத்திற்குப் பிறகு இலண்டன் சென்றடைந்தார்கள். அல்ஹம்துலில்லாஹ். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமானது. வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் புத்தம்புதிய வழிகள் திறக்கப்பட்டன.

செய்தி: அல்ஹகம் ஆங்கில வாரப் பத்திரிகை

தேதி: 06.04.2018 & 13.04.2018

தமிழில்: செய்யது அன்வர் அஹ்மது, தூத்துக்குடி.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 31 January 2019 Issue No. 5

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

மாறுபட்டு இருக்கின்றது). அல்லாஹ் கருணை காட்டக் கூடியவாக இருக்கவில்லை என்றால் மனிதன் ஒரு நொடிப் பொழுதைக் கூட கழிக்க முடியாது. அவன் மனிதனுக்காக ஆயிரக்கணக்கான பயன்தரக்கூடிய பொருட்களைப் படைத்துள்ளான். இவ்வாறு இருக்கும்போது அவன் தவ்பாவையும், நற்செயல்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று கருத முடியுமா?

**பாவம் மற்றும் தவ்பாவின் உண்மைத்துவம்**

அல்லாஹ் பாவங்களை ஏற்படுத்துகின்றான். பிறகு ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு பாவத்திற்கான மன்னிப்பை கேட்க வேண்டும் என்பது பாவத்தின் உண்மைத்துவம் இல்லை. உதாரணமாக, ஈயின் இரண்டு இறக்கைகள் இருக்கின்றன. அதில் ஒன்றில், குணமளிக்கும் ஆற்றலும் மற்றொன்றில் விஷமும் இருக்கின்றது. அவ்வாறே மனிதனிடத்தும் இரண்டு இறக்கைகள் இருக்கின்றன. ஒன்று பாவத்திற்கானது; மற்றொன்று தவ்பாவிற்கானதாகும்.

இது நடைமுறையிலுள்ள விஷயமாகும். அதாவது ஒரு மனிதர் தனது அடிமையைக் கடுமையாகத் தாக்குகின்றார். இதற்குப் பிறகு அதற்காக அவர் வருந்துகின்றார். இவ்வாறு இரண்டு இறக்கைகளும் ஒன்றாகவே செயல்படுகின்றன. விஷத்துடன் மருந்தும் இருக்கிறது.

இவ்வாறு இருக்கும் போது இயல்பாகவே எழுகின்ற கேள்வி என்னவென்றால், பிறகு விஷம் ஏன் உருவாக்கப்பட்டது? இதற்கான பதில் என்னவென்றால், இது விஷமாக இருந்தாலும் அதைக் கொல்வதற்காக பயன்படுத்தும்போது அந்த கட்டளையை அது ஏற்றுக் கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது. பாவமே இல்லையென்றால் பிறகு மனிதனிடம் ஆணவத்திற்கான விஷம் அதிகமாகி விடும். ஆனால் தவ்பா இதனைச் சரி செய்கின்றது. ஆணவத்தின், அலங்காரத்தின் பாவத்திலிருந்து மனிதனை அது பாதுகாத்து வைக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 70 முறை இஸ்திக்ஃபார் செய்திருக்கும்பபோது நாம் என்ன செய்ய வேண்டும்? இறைவன் மீது திருப்தியடையாத, பாவத்தைப் பாவமாக கருதாத அந்த நபரே பாவத்திலிருந்து தவ்பா செய்ய மாட்டார். இறுதியில் அந்த நபரை இறைவன் கைவிட்டு விடுவான்.

ஹதீஸில் வந்துள்ளது. மனிதன் மீண்டும் மீண்டும் அழுதவாறு அல்லாஹ்விடத்தில் மன்னிப்பை வேண்டுவார் என்றால் இறுதியில் இறைவன், நான் உம்மை மன்னித்து விட்டேன். இப்போது உமது உள்ளம் எதை விரும்புகிறதோ அதைச் செய்யும் என்று கூறுவான்.

இதன் பொருள் என்னவென்றால், அவன்அவரது மனதை மாற்றி விட்டான். மேலும் இப்போது அவருக்குப் பாவமானது தீமையாகத் தென்படும். எவ்வாறு ஆடு அசுத்தமான பொருளை உண்ணும்போது மற்றொருவர் அதனால் தானும் அதை உண்ண வேண்டும் என்று பொறாமை கொள்ள மாட்டாரோ அவ்வாறே இறைவன் எவரை மன்னித்து விட்டானோ அவரும் தீமையைச் செய்ய மாட்டார். முஸ்லிம்கள் பன்றி இறைச்சியை வெறுக்கின்றனர். ஆனால் ஹராமான மற்றும் தடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பணிகளை அவர்கள் செய்கின்றனர். எனவே இதிலுள்ள நுட்பம் என்னவென்றால், வெறுக்கத்தக்க ஒரு முன்னுதாரணத்தை வைத்து விட்டு இவ்வாறு மனிதன் பாவத்தை வெறுக்க வேண்டும் என்பதையும் அவன் புரிய வைத்துள்ளான்.

**துஆ மருந்தாகும்**

பாவம் செய்கின்ற மனிதர் தாம் செய்த அதிகமான பாவத்தை எண்ணி துஆச் செய்வதிலிருந்து ஒருபோதும் வெளியே இருக்கக்கூடாது. துஆ மருந்தாகும். இறுதியில் பாவமானது எவ்வாறு தீமையாக இருக்கின்றது என்பதை அவர் துஆவிலிருந்து கண்டு கொள்வார். எந்த மக்கள் பாவத்தில் மூழ்கி துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதிலிருந்து அவநம்பிக்கை அடைந்தவர்களாக இருக்கின்றார்களோ, தவ்பாவின் பக்கம் திரும்ப மாட்டார்களோ இறுதியில் அவர்கள் நபிமார்கள் மற்றும் அவர்களது போதனைகளுக்கு எதிரானவர்களாக இருக்கின்றார்கள்.

**தவ்பா பைஅத்தின் ஒரு பகுதியாகும்**

(மேலே கூறப்பட்டுள்ள) இதுதான் தவ்பாவின் உண்மைத்துவம் ஆகும். மேலும் இது பைஅத்தின் ஒரு பகுதியாக ஏன் இருக்கின்றது? விஷயம் என்னவென்றால் மனிதன் கவனமின்மையில் மூழ்கி இருக்கின்றான். அவன் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரின் கைகளில் பைஅத் செய்யும்போது மரங்களை ஒன்றிணைக்கும்போது எவ்வாறு அதன் தன்மையில் ஒரு மாற்றம் ஏற்படுமோ அவ்வாறே (தம்மிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய அந்த நபரிடத்திலும்) அந்த அருட்களும், ஒளிகளும் வர ஆரம்பித்து விடுகின்றன.

ஆனால் நிபந்தனை என்னவென்றால் அவருடன் உண்மையான தொடர்பை வைத்திருக்க வேண்டும். காய்ந்த கிளைகளைப் போன்று அது இருக்கக் கூடாது. அவரது கிளைகளாக மாறி அவரோடு ஒன்றிவிட வேண்டும். எந்த அளவுக்கு இந்தத் தொடர்பு இருக்குமோ அந்த அளவுக்கு பயன் தரும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 2–3)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

**திருக்குர்ஆனிலிருந்து....**

ஒரு நாள், நாம் அவர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து (இறைவனுக்கு) இணை வைத்தவர்களிடம் நீங்கள் உறுதியாக வாதித்து வந்த இணைகள் எங்கே? என்று கேட்போம். (அந்நாளை நினைத்துப் பாருங்கள்). (6:26)

**∴பைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad